பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
28-6-1993
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 14 திங்கட்கிழமை (28-06-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 212

## வீரச்சாவு

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் விடுதலைப் புலிகள் போராளியான மோகன் அல்லது கலைமகன் (தர்மலிங்கம் மோகன் — முறக்கொட்டாஞ்சேனை) வீரச்சாவடைந்தார். (ஓ-3)

## படகுச் சேவை

இளாலி—பூநகரிப் படகுச் சேவை இன்று திங்கட்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

★ குடாநாட்டிற்குத் தேவையான பொருள்களின்

# விவரப்பட்டியலுடன் வீரசேகர நேற்று கொழும்பு திரும்பினார்

### ஆனைக்கோட்டையில் பயங்கரம்

## ஷெல்லைக் குத்தியவர் உடல் சிதறிப் பலி!

### மற்றும் நால்வர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

வேலியோரத்தில் மறைந்து கிடந்த ஷெல்லை எடுத்து குத்திப் பார்த்தவர் உடல் சிதறிப் பலியானார். அருகிலிருந்த மூன்று வயதுப் பெண்குழந்தை உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

ஆனைக்கோட்டை அகதி முகாம் பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஷெல்லைக் குத்திப்பார்த்த சிவபாதசுந்தரம் சியோமல் (வயது 18) என்ற இளைஞரே மரணமானவராவார். ஷெல் வெடித்த இடத்திலிருந்து சுமார் இருநூறு யார் தூரத்தில் இவரின் தலை மாத்திரம் காணப்பட்டது. ஏனைய உடற்பகுதிகள் சிதறி அருகில் இருந்த பனைவடலி மற்றும் தென்னைமரங்களில்—சதைத் துண்டங்களாக — தொங்கிக் கிடக்கக் காணப்பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பெரியவிளானில் இளம்பெண் படையினர் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 28

இளவாலை, பெரியவிளான் பகுதியில் நேற்று நண்பகல் வீடு பார்க்கச் சென்றவர்கள் மீது ஸ்ரீலங்காப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளம்பெண் ஒருவர் உயிரிழந்தார்.

பெரியவிளானில் இருந்து இடம்பெயர்ந்து ஆனைக் கோட்டை அகதி முகாமில் வசித்து வந்த சூசைப்பிள்ளை கலிட்டா [20 வயது] என்பவரே இறந்தவர் ஆவார்.

படுகாயமடைந்த பிரஸ்தாப பெண்ணை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தபோது வழியில் அவரது உயிர் பிரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது [ஓ-15]

## 'குமண' இன்று புறப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 28

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கி முடித்த பின்னர் "குமண" கப்பல் அரச ஊழியர்களை ஏற்றிக்கொண்டு இன்று திருகோணமலைக்கு புறப்படுகிறது.

கொழும்பில் சிகிச்சை பெற்றுத்திரும்புவோரை ஏற்றிக் கொண்டு மீண்டும் புதன் அது பருத்தித்துறைக்கு வந்து சேரும்.

கொழும்பு செல்லும் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு மீண்டும் அன்றே திருமலைக்கு செல்லும் குமண பின்னர் அங்கிருந்து கொழும்புக்குச் செல்லும். (உ-3-87)

## படையினரின் சூட்டுக்கு வாகரையில் இருதமிழர் பலி

மட்டக்களப்பு வாகரைப் பகுதியை கடந்த வெள்ளிக்கிழமை சுற்றி வளைத்த படையினர் அங்கு கண்டபடி மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

கடற்றொழிலாளியான சபாபதி தியாகேந்திரன் (வயது 20) தொண்டர் ஆசிரியரான கதிர்காமத்தம்பி குருகுலசிங்கம் (வயது 22) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் 20 பேரை கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர். (ஓ-3)

### ரஞ்சனை நஞ்சூட்டி கொல்ல முயற்சி:

## ராணுவச் சிப்பாய்க்கு 15 வருடச் சிறை!

கொழும்பு, ஜூன் 28

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவை நஞ்சு வைத்து கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு இராணுவ நீதிமன்றம் 15 ஆண்டு கால சிறைத் தண்டனை விதித்தது.

1989 ஆண்டு ஜே.வி.பி. போராட்டத்தின் போது அந்த இயக்கத்தின் அனுதாபியான டி சில்வா என்ற இராணுவச் சிப்பாய் அரசு இரகசியங்களை ஜே.வி.பியினருக்கு வழங்கினார் என்றும்—

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'வாதுவ' இன்று வந்து சேரும்

நேற்று வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட 'வாதுவ' கப்பல் இன்று காலையே பருத்தித்துறையை வந்தடையும் என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் இன்றே ஆரம்பிக்கப்படும். (உ-3-87)

## ருமேனியாவில் இலங்கையர் கைது!

கடந்த வியாழனன்று சட்ட விரோதமாக ருமேனிய எல்லையைத் தாண்ட முற்பட்ட இலங்கையர் சிலரை அந்நாட்டின் எல்லைக் காவல் படையினர் கைது செய்ததாக அறிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டோர் தமிழர்களா என்ற விவரம் தெரியவரவில்லை. (உ-3)

## கைதியின் தந்தை திரும்பினார்

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதி ஒருவரைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணத்துக்கு வந்து, இங்கு தங்கி நின்ற — கைதி ஒருவரின் தந்தை — நேற்று கொழும்பு திரும்பினார்.

பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவுடன்பருத்தித்துறையிலிருந்து 'குமண' கப்பல் மூலம் நேற்று மாலை அவர் காங்கேசன்துறைக்குப் புறப்பட்டார்.

## 49 பேருக்கு மரண தண்டனை

போதைப் பொருள் கடத்தல்காரர்கள் 49 பேருக்கு சீனாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஐ.நா.வின் போதைப் பொருள் எதிர்ப்பு நாளான நேற்று முன்தினம் மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. (ஓ-6)

## அரசு தலைவர்களுடன் இன்று ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்கள் தொடர்பாக திரட்டப்பட்ட விவரங்கள் அடங்கிய அறிக்கையைப் பெற்றுக்கொண்டு, ஜனாதிபதியின் விசேட தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர நேற்று கொழும்பு திரும்பினார்.

இந்தப் பொருள்களை வடக்கே அனுப்பி வைப்பது குறித்து அரசுத் தலைவர்களுடன் அவர் இன்று கொழும்பில் ஆலோசனை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதியின் விசேட தூதுவர் பிரிகேடியர் ஆனந்தவீரசேகரா நேற்று மாலை 4.30 மணியளவில் கொழும்புக்குப் புறப்பட்டார். நேற்று முன்தினம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பொருள்கள் மீதான தடைநீக்கம்

## வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது

வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்குத் தடைசெய்யப்பட்டிருந்த பொருள்களின் தடைநீக்கம் குறித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது.

இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயர் மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோவால் விடுக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலின் பிரதி ஒன்றை யாழ். வந்திருந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா, விடுதலைப்புலிகளிடம் நேற்று முன்தினம் கையளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## பெலவத்த தடுப்பு முகாமின் நான்கு கைதிகள் எங்கே?

கொழும்பு, ஜூன் 28

பெலவத்த தடுப்பு முகாமில் இருந்து கடந்த முதலாம் திகதி வெளியே கொண்டு செல்லப்பட்ட நான்கு சிங்கள கைதிகளுக்கும் என்ன நடந்தது எனத் தெரியவில்லை.

அவர்களுக்கு என்ன நடந்தது, எங்கே இருக்கிறார்கள் என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அவர்கள் நால்வரும் உயிருடன் இருக்கிறார்களா என்பது கூட தெளிவில்லை.

இந்த நான்கு கைதிகளும், அண்மையில் முகாமுக்குள் இடம்பெற்ற கைதிகளின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியாவுக்கு கள்ளத்தோணியில்

## உடுகம்பொல தப்பிச் செல்ல அமைச்சர் ஒருவரே உதவினார்

கொழும்பு, ஜூன் 28

கொழும்பில் இருந்து தாம் இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதற்கு பிரேமதாச அமைச்சரவையில் இருந்த அமைச்சர் ஒருவரே உதவினார் என்று முன்னாள் பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரேமதாச உடுகம்பொல தெரிவித்துள்ளார்.

தம்மை கைது செய்ய முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச இரகசியமாகப் பிறப்பித்த உத்தரவை உடனடியாக அந்த அமைச்சர் தமக்குத் தெரியப்படுத்தியதால் தான், தாம் "கள்ளத்தோணி" ஏறி சென்னைக்குத் தப்பிச் செல்லமுடிந்தது என்றும் அவர் சொன்னார்.

அந்த அமைச்சர் யார் என்பதையும், தம்மை கடல்வழியாக சென்னைக்கு அழைத்துச் சென்றது யார் என்பதையும் உடுகம்பொல தெரிவிக்கவில்லை.

தாம் இந்தியாவில் இருந்தபோது விக்டர் பெர்னாண்டோ என்று பெயரை மாற்றிக்கொண்டு கேரள மாநிலத்தவர் என்று கூறி வந்ததாகவும்—

புதுடில்லிக்குச் சென்றபோது ஜோசப் மத்தியூ என்ற பெயருடன் நடமாடியதாகவும் உடுகம்பொல தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஓ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு கிறைண்டர்களும் ஒரு நம். 7 அல்லரும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல: 18, கொண்டலடி லேன், நல்லூர். (26255)

### விஞ்ஞான விளக்கம்

ஆண்டு - 10 பாடத்திட்டத்திலுள்ள பதின்மூன்று அலகுகளுடன் தொடர்பான அனைத்து விஞ்ஞான விளக்கங்களைக் கொண்டது. எங்கும் கிடைக்கும். (6295)

### நாகபூஷணி படம்

நயினை நாகபூஷணி அம்மன் படம் பிறேம் செய்து விற்பனையாகிறது. விலை ரூபா 125/-. கிடைக்கும் இடம் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-5327)

### G.C.E. O/L வினா-விடை

உயர் கல்விச்சேவை நிலையத்தின் கடந்தகால வினா-விடை 1992 உட்பட சகல பாடங்களும், 5ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சைக்கான வினா-விடையும் விற்பனையாகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கு அருகில்.) (சி-5326)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உடன் விடை கிடைக்கும். ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் அனைத்துக்கும் தொடர்பு: டாக்டர் த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு (26231)

### மாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

### புலமைப்பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழியில் உச்சப்புள்ளி பெற உதவும் ஒரேயொரு நூல் ''புலமைப்பரிசில் - மொழித் தேர்ச்சி'' அனைத்து வகை வினாக்களும் அடங்கியது. எங்கும் கிடைக்கும் (6294)

## நொதேண் கல்வி நிலையம்

சுண்டிக்குளி.

**O/L Dec 1993**

பகல் நேர, பகுதி நேர மீட்டல் வகுப்புகள் மீண்டும் ஒரு புதிய பிரிவு ஆரம்பம்:

**29-06-1993**

MATHS —
திரு. பஞ்சறட்னம்
விஞ்ஞானம் —
திரு. சதீஸ்
திரு. ஸ்ரீ
கணிதம் —
திரு. ஜெயக்குமார்
திரு. இரட்டினவேல்
தமிழ் —
திரு. திருஞானம்
சமூகக்கல்வி —
திரு. வில்சன்
ஆங்கிலம் —
திரு. சிவயோகராஜா
திரு. சிவநாதன்
வர்த்தகம் —
திரு. ரவீந்திரன்

(26245)

## கோபாலசாமி கோரிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து திரு நாஞ்சில் மனோகரனை வெளியேற்றிய முடிவை மீள்பரிசிலனை செய்யுப்படி தி.மு.க எம்.பி வை. கோபாலசாமி, தி.மு.க. தலைமைப்பீடத்தைக் கேட்டுள்ளார். (த-ன)

## மாணவ தாதிகளுக்கும் இம்மாதம் முதல் அலவன்ஸ்

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து, தாதிமார்களுக்கு வழங்கப்படும் அலவன்ஸ் மாணவத் தாதிமார்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

தாதிமாருக்கான இந்த அலவன்ஸ் தொகையை அரசாங்கம் 1988ஆம் ஆண்டில் இருந்து அதிகரித்துள்ளது.

தாதிமார் பணியில் ஆற்றி வரும் சேவையைக் கருத்திற் கொண்டே இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத் அண்மையில் தெரிவித்தார்.

## பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)


*களஞ்சியத் தொழிலாளர்கள்:*

எமது சங்கத்தில் களஞ்சியத்தில் கடமையாற்றுவதற்கு தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். கடமையாற்ற விரும்புவோர், எதிர்வரும் 29-06-1993ஆம் திகதி காலை 9மணிக்கு சங்கத் தலைமை அலுவலகத்திற்குச் சமுகம் கொடுத்து தலைவர் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

- பொதுமுகாமையாளர்.

26 06 1993 (சி-5409)

## உ ஞானக் கவிஞர்க்கு வாழ்த்து



சித்தாந்த பண்டிதர்,
சைவ பூஷணம்,
பௌராணிகர்,
வைத்திய பூஷணம்
டாக்டர்
நா. கனகரத்தினம்
அவர்கள்

மெய்கண்டார் ஆதீன சார்பில்
சிவதர்ம வள்ளல்
கலாநிதி
க. கனகராசா
அவர்களால்

ஞானக் கவிஞர் விருதினைப் பெற்றமையை வாழ்த்துகின்றோம்!

(2626) — ஆத்மீக வட்டம்.

## PRECIOUS MEMORIES 6TH YEAR



**Sinnathamby Rajendram**

Called to Rest: 28 — 06 — 1987

God looked around his Garden,
And found an empty space
He looked down from heaven,
And saw your loving tired face,
He put his arms around you
And whispered, "Come and Rest",
We know that what he planned
Was for you the Best.
Darling Dadda you live in our thoughts to - day and every - day

Your Loved Ones.

"Rajasthan"
Sinnathamby Avenue,
Manipay South. (6283)

## யாழ். பொறியியல் இணையம் கலந்துரையாடல்

*விடயம்:* ''வெளிநாட்டில் வதியும் பொறியியலாளர்களின் கண்ணோட்டத்தில் எமது பிரதேசத்தின் உட்கட்டுமானம்''

*சிறப்புரை:* கலாநிதி ச மகேஸ்வரன் பொறியியலாளர், (லண்டன்)

இடம்: நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

*காலம்:* 29—06—1993 செவ்வாய் மாலை 3—00 மணி

*பொறியியற்றுறை சார்ந்தோரும், ஆர்வலர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.*

— நிர்வா க்நழு

(262?8)

## 2ஆம் ஆண்டு நினைவு தினம்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 | 28 |
| 09 | 06 |
| 1922 | 1991 |

### திருமதி பொன்மலர் நடராசா

உரும்பராய் தெற்கு (சந்தி)

திரு. முத்தையா நடராசா (போய்ஸ்) (இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரும், போய்ஸ் பார்மசி பண்டத்தரிப்பு) உரிமையாளரும், பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத் தலைவரும்) அவர்களின் மனைவியும், திருமதி ந சுந்தரமூர்த்தி, நவீனராசா, திருமதி நீற்றா விக்னராசா, திருமதி தேவி நாகேஸ்வரன், காலஞ்சென்ற நேசராசா, திருமதி நவீனி தேவசுந்தர், முத்தழகன் ஆகியோரது அன்புத் தாயாருமாவார்.

உங்கள் நினைவுகள் நீங்காத நினைவுகளாக என்றும் எங்கள் நெஞ்சமதில் தொடர்ந்து வரும்.

அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தாவடி வீதி,
மானிப்பாய். (6275)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 09 — 1920

மறைவு: 11 — 07 — 1989

### திருமதி சின்னத்தங்கம் அண்ணாமலை

(மயிலிட்டி தெற்கு)

திதி: 28—06—1993

எமது அன்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும் பிறப்பிடமாகிய தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் நான்கு சென்றாலும், உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சேச் லேன்,
தாவடி. (26265)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மூன்றாம்பேர்வழி வராமலிருக்க..

இலங்கையில் நடைபெறும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். விடுதலைப் புலிகளும் அரச படைகளும் யுத்த நிறுத்தத்துக்கு உடனடியாகச் சம்மதித்து, போர் நிறுத்தம் அறிவிக்கப்பட வேண்டும்.

இந்தியாவின் முக்கிய எதிர்க் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருக்கிறது. அவ்வேளை அக்கட்சி தெரிவித்த யோசனைகளில் மேலே கூறப்பட்டதும் ஒன்றாகும்.

இனப்பிரச்சினை இலங்கையின் உள்விவகாரம். அதனைத் தீர்ப்பதில் சிங்களவர்களும் தமிழர்களும் மட்டுமே பங்காளிகளாக இருக்க முடியும்; இருக்க வேண்டும். வெளியார் எவரும் இவ்விவகாரத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட அனுமதிக்கப்படலாகாது.

ஆனால் வெளிநாடு ஒன்று மூன்றாம் பேர் வழியாக நின்று, இனப்பிரச்சினையைத் தீர்க்குமாறு இலங்கை அரசு மீது அழுத்தம் கொடுப்பது தவறல்ல. சிங்களவர்களும் தமிழர்களும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான இணக்கமான, உகந்த சூழ்நிலையைத் தோற்றுவிப்பதிலும் மூன்றாவது நாடு ஒன்று அல்லது பல நாடுகள் பங்காற்றலாம்.

இந்த வகையில், தலையீடு செய்யாத முறையில், எத்தரப்பினரும் ஆலோசனைகளைத் தெரிவிப்பதையும், பேச்சுக்கள் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதையும் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால் இந்தியாவின் எதிர்க்கட்சி கூறும் ஆலோசனையை கொழும்பு அரசு பொருட்படுத்துமா என்பது சந்தேகமே.

ஆஸ்திரேலியா, சுவீடன் போன்ற நாடுகளின் அரசாங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உதவுவதற்கு முன் வந்திருந்தும் ஸ்ரீலங்கா அரசு அதனைப் பயன்படுத்த முன் வரவில்லை. அவ்வாறிருக்க பாரதிய ஜனதா கட்சியின் ஆலோசனைகளை ஏறெடுத்தும் பார்க்கும் என்று எதிர் பார்ப்பதற்கில்லை.

இங்கே பாரதிய ஜனதா கட்சி தெரிவித்திருக்கும் யோசனைகளில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளும் கூறப்பட்டிருக்கின்றன. கொழும்பு அரசும் விடுதலைப்புலிகளும் யுத்தத்தை நிறுத்த சம்மதிக்க வேண்டும். யுத்த நிறுத்தத்தின் பின்னர் பேச வேண்டும் என்ற மட்டோடு நின்று கொண்டால் போதும், அதற்கு மேல் பேச்சுக்களை எப்படி நடத்துவது, யார் யாரைச் சேர்ப்பது, பேச்சுக்களின் முடிவு எவ்வாறு அமைய வேண்டும் என்பது போன்ற யோசனைகள், மூன்றாம் பேர்வழி வந்து நிர்ப்பந்திப்பதற்கு சமமானது.

இனப்பிரச்சினை சம்பந்தமான பின்னணிகளையும், முந்திய அனுபவங்களையும் அறிந்திராத மூன்றாமவர் வந்தால் இது போன்ற நிர்ப்பந்தங்களே வந்து சேரும். ஆகையால் கொழும்பு அரசு, இப் பிரச்சினையை தமிழர் தரப்புடன் தானாகவே பேச்சைத் தொடங்கி இணக்கமான ஒரு தீர்வுக்கு — தமிழர்களும் சுயகௌரவமும் சுதந்திரமும் உள்ள பிரசைகளாக வாழ வகை செய்யும் தீர்வுக்கு — வருவதற்கு மனங்கொள்ள வேண்டும். தமிழர்களை ஏமாற்றுவதற்கோ அல்லது அவர்கள் மீது தமக்குச் சாதகமான திட்டம் ஒன்றைத் திணிப்பதற்கோ உள் நோக்கம் வைக்காது திறந்த மனதுடன் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண முன்வந்தால் மூன்றாம் பேர்வழி எவரினதும் ஆலோசனையோ உதவியோ இன்றி, சமாதானத்தைத் தோற்றுவிக்கலாம்.

## இன்று

புலவர் நா. சிவபாதசுந்தரனார் எழுதிய "புறப்பொருள் வெண்பா மாலை ஆராய்ச்சி" (3 ஆம் பாகம் என்னும் நூலின் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் தமிழ் மன்றத்தின் ஆதரவில் நடைபெறும். தமிழ் மன்றத்தின் காப்பாளர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். (ஓ)

o o o

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ் பல்கலைக்கழக புவியியல் கழகத்தினரின் "யாழ்ப்பாணப் புவியியலாளன்" இதழ் VI, VII, VIII வெளியீடு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபம் இல. 2 இல் நடைபெறும். (க)

## ஆலயங்களில்

பளை தம்பகாமம் செருக்கன் சாட்டி முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் நாளை செவ்வாய் காலை நடைபெறும். (த-72)

o o o

கோண்டாவில் அரசடி விநாயகர் கோவிலில் மகாபாரத தொடர் விரிவுரை நிகழ்த்திய கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் இறுதி நாளான இன்று கௌரவிக்கப்படவுள்ளார்.

இன்று பிற்பகல் 6 மணிக்கு அந்த நிகழ்ச்சி இடம்பெறும். விசேட நிகழ்ச்சியாக செல்வி கைலநாதன் சுவர்ணலதாவின் இன்னிசை கச்சேரியும் இடம் பெறும். (த-5)

o o o

உருப்பராய் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தில் நாளை செவ்வாய் மாலை 6 30 மணிக்கு சங்கீத பூஷணம் திரு. எஸ். பத்மலிங்கத்தின் பாட்டுக் கச்சேரி நடைபெறும். (ஓ-154)

o o o

வண்ணை ஸ்ரீ வீரமகாளி அம்மன் ஆலய மகோற்சவத்தில், புதிதாக அமைக்கப் பெற்ற கைலாயவாகனத்தின் வெள்ளோட்டம் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும். கைலாயவாகன உற்சவம் நாளை நடைபெறும்.

o o o

நவாலி, சம்பேதுருபாவிலு ஆலய திருநாள் நாளைகாலை 7 மணிக்கு சிறப்பாக நடைபெறும்.

இன்று மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனை சுற்றுப் பிரகாரம் என்பன நடைபெற இருக்கிறது

நாளை காலை 7 மணிக்கு திருநாள்பாடல் கூட்டுத் திருப்பலியை அடுத்து திருச்சொரூபப் பவனி இடம்பெறும். (ஓ-51)

## விளையாட்டு நிகழ்வு

யாழ். புனித அடைக்கல மரியாள் விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்தி வரும் விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை புனித மரியாள் வித்தியாலய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ அச்செழு சித்தி விநாயகர் அணி எதிர் ஈச்சமோட்டை அணி

★ யாழ். பல்கலைக் கழக அணி எதிர் அளவெட்டி விநாயகர் அணி.

## நாடக விழா

நாவலி சென். பீற்றர்ஸ் தேவாலய திருநாளை ஒட்டி பங்கு மக்கள் நடத்தும் மாபெரும் நாடக விழா நாளை மறுதினம் புதன் கிழமை மாலை 7 மணிக்கு ஆலய முன்றிலில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் நடைபெற இருக்கிறது. (ஓ-51)

நேற்று அதிகாலை

# ஈராக் மீது அமெரிக்கா திடீர் ஏவுகணை தாக்குதல்!

## புஷ் கொலை சதி முயற்சிக்கு பதிலடியாம்!

பக்தாத், ஜூன் 28

வளைகுடாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்க யுத்தக் கப்பல்களில் இருந்து நேற்று அதிகாலை வேளை பக்தாத் நகரில் உள்ள ஈராக்கிய புலனாய்வுத் தலைமையக கட்டடத்தின் மீது பலத்த ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புலனாய்வுத் தலைமையகத்துக்கு அருகில் உள்ள வீடுகளில் இருந்த ஆறு பொதுமக்கள் இத்தாக்குதலில் பலியானதாக ஈராக்கிய சிவில் அதிகாரிகள் தெரித்துள்ளனர்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட சதி முயற்சியில் ஈராக்கிய உளவு நிறுவனமும் சம்பந்தப்பட்டிருந்ததாலேயே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி திரு பில் கிளின்டன் தெரிவித்துள்ளார்.

பக்தாத் நகரின் மையத்தில் உள்ள புலனாய்வுத் தலைமையகக் கட்டடத்தின் மீது நேற்று அதிகாலை நடத்தப்பட்ட அந்தத் திடீர் ஏவுகணைத் தாக்குதலால் நகர மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

தாக்குதலால் எழுந்த புகை மண்டலத்தை பல மைல்களுக்கு அப்பால் இருந்தும் பார்க்க முடிந்ததாகவும் —

முதலில் அது இராணுவ ஒத்திகை எனப் பலரும் கருதியதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

அமெரிக்க யுத்தக் கப்பல்களில் இருந்து மொத்தம் 23 'குருஸ்' ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன.

இத்தாக்குதல் கோழைத்தனமானது என்று ஈராக் அரசு கண்டித்துள்ளது.

நேச நாடுகளுடன் கலந்து ஆலோசித்த பின்னரே பக்தாத் மீதான தாக்குதல் பற்றி முடிவு செய்யப்பட்டதாகவும் —

அமெரிக்கா மீதான எந்தத் தாக்குதலுக்கும் பதிலடி கிடைக்காமற் போகாது என்றும் அமெரிக்க ஜனாதிபதி திரு பில் கிளின்டன் இத்தாக்குதல் பற்றி கருத்து வெளியிடுகையில் கூறினார்.

# தி.மு.கவில் மீண்டும் சேர்க்க கோருகிறார் நாஞ்சில்

தி.மு கவில் இருந்து அண்மையில் வெளியேற்றப்பட்ட நாஞ்சில் மனோகரன் மீண்டும் தம்மை தி. மு. கவில் சாதாரண உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இதுவரை தி மு. க. தலைமைப்பீட உறுப்பினர்களில் 3 ஆம் இடத்தை அவர் வகித்து வந்தார்.

கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் பத்திரிகைகளுக்கு தாம் வெளியிட்ட கருத்துகளுக்கும் இது குறித்து வெளிவந்த செய்திகளுக்கும் வருந்துவதாக திரு. மனோகரன நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தார்.

தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியை நேரிற்சந்தித்து தமது வருத்தத்தைத் தெரிவிக்கப்போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களாக மாவட்டச் செயலாளர்கள் செஞ்சி இராமச்சந்திரன், பொன் முத்துராமலிங்கம், நெல்லி லஷ்மணன் ஆகியோர் தி மு க. அறக்கட்டளையில் தம்மை நியமிககாதது குறித்து தலைமையிடம் போராட வேண்டும் என்று தம்மை வற்புறுத்தி வந்ததாகவும் நாஞ்சில் மனோகரன் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

தாம் எழுதிய கவிதை கருணாநிதியை இழிவு படுத்தும் நோக்கத்தில் எழுதப்பட்டது அல்ல என்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ-எ)

# நல்லை ஆதீன முதல்வர் இந்தியாவில் ஸ்தலயாத்திரை

## இன்று புறப்படுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 28

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இந்தியாவில் தலயாத்திரை மேற்கொள்வதற்காக இன்று புறப்படுகிறார்

இன்று பிற்பகல் 'குமண' கப்பல் மூலம் திருகோணமலை செல்லும் சுவாமிகளை, அங்கு வரவேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதைத் தொடர்ந்து கொழும்பு செல்லும் சுவாமிகள் கொழும்பில் இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது

தமிழகம் செல்லும் அவர் அங்குள்ள ஆதீனங்களுக்கு விஜயம் செய்வார். வட இந்திய, தென்னிந்திய ஸ்தலங்களுக்கு அவர் யாத்திரை செய்வார்

இலங்கையில் நிரந்தர அமைதிவேண்டி அங்குபிரார்த்தனைகள் மேற்கொள்வேன்" என்று சுவாமிகள் தெரிவித்தார். (உ-3)

# அமைதி நிலையை உருவாக்க உதவும் நாடுகள் வற்புறுத்து

கொழும்பு, ஜூன் 28

இலங்கையின் இராணுவச் செலவினங்கள் குறைய வேண்டுமானால், வடக்கு—கிழக்கில் அமைதியான சூழ்நிலை ஏற்பட வேண்டும். ஆகவே விரைவில் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுங்கள்.

—இவ்வாறு பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில் கோரப்பட்டது.

அந்த மாநாட்டில் பங்கு பற்றிய பின் கொழும்பு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

"சண்டே ஒப்சேர்வர்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே பிரதமர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

பல நாடுகளிடம் உதவி கோரியிருந்தோம். எவ்வளவு உதவி கிடைக்கும் என்பது குறித்து ஆரம்பத்தில் சந்தேக நிலையே இருந்தது

'ஆனால் பயங்கரவாதப் பிரச்சினையை எதிர்நோக்கும் எந்த நாட்டிலும் இருக்கக் கூடிய சில விதிவிலக்கான அம்சங்கள் இலங்கையிலும் இருப்பதை உதவி வழங்கும் நாடுகள் புரிந்து கொண்டன.'— இவ்வாறு பிரதமர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார். (உ-3)

## முத்திரையிடல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

உடுவில் பிரதேச செயலாளர் பணிமனையில் இன்று 28 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 8ஆம் திகதி வரையிலும் — மருதனார்மடம் பிரதேச அபிவிருத்திச் சபை காரியாலயத்தில் ஜூலை 12 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையிலும் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 1-30 மணிவரை நிறுத்தல், அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும். (க-162)

## பாரதீயஜனதாவில் நடிகை லட்சுமி

பிரபல தமிழ் நடிகை லட்சுமி பாரதீய ஜனதாக் கட்சியில் சேர்ந்துள்ளார்,

கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் அண்மையில் நடந்த பாரதீய ஜனதாக் கட்சியின் தேசியக் குழுக்கூட்டத்தின் போது—

லட்சுமி அக்கட்சியில்சேர்ந்து கொண்டதாக அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## நெருப்புக்குச்சி மருந்து வினையானது

நெருப்புக்குச்சி மருந்தை எடுத்து 'சைக்கிள் ரியூப் வால்வ்' கட்டைக்குள் இறுக்கி விட்டு, அதை ஆணி வைத்து அடித்த 10 வயதுச் சிறுவன் படுகாயமடைந்தான்

பளை, முகமாலையில் நேற்றுக் காலை நடந்த இந்தச் சம்பவத்தில், கூதேயிடத்தைச் சேர்ந்த ஜெயராம் விஜயகுமார் என்ற சிறுவனே படுகாயமடைந்தான். யாழ். ஆஸ்பத்திரியில் இச்சிறுவன் சேர்க்கப்பட்டுள்ளான். (ஓ-15)

## புதிய ஆலயம் திறப்பு

பேலிகண்டியில் குழந்தை யேசு என்ற பெயரில் சிற்றாலயம் ஒன்று பருத்தித்துறை பங்குக்குரு வண பிதா ஆர். எம். ஜி நேசநாயகம் அடிகளாரினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இப்பகுதி கத்தோலிக்க மக்களால் அமைக்கப்பட்ட இச் சிற்றாலயத்தை திறந்து வைத்த பங்குக் குரு, உதவிப் பங்குக்குரு ஜேம்ஸ் சிங்கராயருடன் இணைந்து முதலாவது திருப்பலி பூசையை ஒப்புக் கொடுத்தார். (த-87)

## பொது மலசலகூடம்

யாழ். நகரில் பொதுமலசல கூடங்களை அமைக்கும் பணிகளை யாழ் மாநகர சபை துரிதமாக மேற் கொண்டு வருகின்றது.

தற்போது மின்சார நிலைய வீதியில் 14 பொது மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை ஜூலை மாதமளவில் மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப் படும். (த-17)

## மரணம்

செப்ரிசீமியா (Septicaemia நோயினால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன் தினம் அங்கு மரணமானார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மத்தியாஸ் கிளாரம்மா

வீமன்காமம், தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் பின்னர் இடம்பெயர்ந்து 64/10, ஸ்டேசன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமாகிய திருமதி மத்தியாஸ் கிளாரம்மா நேற்று (27-06-93) காலமானார். அன்னார் காலஞ்சென்ற மத்தியாசின் அருமை மனைவியும், காலஞ்சென்ற ம. லோறன்ஸினதும், ம. தேவசகாயம் (ஓய்வுபெற்ற அபாலதிபர்-யாழ்ப்பாணம்), திருமதி அ. ஞானசவுந்தரி (France), திருமதி அ. தோசாமலர், திருமதி ஜே. நேசமலர், திரு. ம. இராசேந்திரம் (சவுதி), திரு. அன்ரன் ஜெகநாதன் (France) ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. அருளம்பலம், திரு. சபாரத்தினம், திரு. ஜெயராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (28-06-1993) திங்கட்கிழமை 64/10, ஸ்டேசன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து பிற்பகல் 4-00 மணிக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. தேவசகாயம்,
(மகன்)

64/10, ஸ்டேசன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(26267)

## வல்லிபுரம் பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற Assessor)

அல்வாய் கிழக்கு, துலாவையைப் பிறப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் பொன்னம்பலம் 27-06-93 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி வல்லிபுரம் அன்னப்பிள்ளை ஆகியோரின் இளைய புத்திரனும், காலஞ்சென்ற கார்த்திகேசு, திரு. பாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற திரு. ஆப்பாத்துரை (சட்டத்தரணி), திருமதி புவனப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், கிரிதரன், பவானி, திருமதி பிறேமி (டென்மார்க்), திருமதி தயாளினி, நிரஞ்சன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயக்குமார் (டென்மார்க்), அருமைநாயகம் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று (27-06-93) அல்வாயில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி பொ. நகுலாம்பிகை.
(மனைவி)

'துலாவை'
அல்வாய் கிழக்கு.
அல்வாய்.

(26264)

## சுப்பையா பாலசுப்பிரமணியம்

(சுப்பையா அன்சன்ஸ் உரிமையாளர்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த சுப்பையா அன்சன்ஸ் உரிமையாளர் சுப்பையா பாலசுப்பிரமணியம் கொழும்பில் காலமானார்.

இவர் கமலாதேவியின் அன்புக் கணவரும், பவானி சியாமளா, பகீரதன் (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்) வரதராஜன், வரதலட்சுமி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தில்லைநேசன், இராஜநவநாதன், கலைமகள், துஷியந்தி, பாலச்சந்திரன் ஆகியோரின் பிரியமுள்ள மாமனாரும், தேசிகநாதனின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 27-06-93 அன்று கொழும்பில் நடைபெற்றன.

தகவல்
பா பகீரதன்
(மகன்)

"துவாரகா"
பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்

(சி-5410)

## திருமதி தினைப்புனராணி கோபாலசிங்கம்

திருமதி தினைப்புனராணி கோபாலசிங்கம் (ராணி) நேற்றுக் காலமானார். அன்னார் திரு. தெ. கோபாலசிங்கத்தின் மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி சந்தையா (ஜெயிலர்) அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், திருமதி யோகா செல்வரத்தினம் (தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர்), புசுழேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், திரு. க. செல்வரத்தினம் (அதிபர், உடுவில் மான்ஸ் ம.வி) அவர்களின் மைத்துனியும், காயத்திரி, கஜேந்திரன், திவாகரன் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் 48/5, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. செல்வரத்தினம்

48/5, முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(26271)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உத்தரவு பெற்ற எரிபொருள் முகவர்களையும் இன்று காலை 9 மணிக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடக்கவிருக்கும் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ)

## வெலவத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்திற்காக தீவிரமாகச் செயற்பட்டவர்கள் என்றும்—

கைதிகளின் உரிமைகள் குறித்து அதிகாரிகளுடன், அடிக்கடி காரசாரமாக விவாதிப்பவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில்—

வெலவத்த முகாமில்இருந்து திடீரென பூஸா முகாமுக்கு மாற்றப்பட்ட வேறு நான்கு சிங்களக் கைதிகளில் இருவரை காணவில்லை என்றும்—

அந்த இருவரும் வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும், அவர்கள் எங்கு இருக்கிறார்கள் எனத் தெரியவில்லை என்றும் பி.பி.ஸி. சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-6)

## விவரப்பட்டியலுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவருடன் யாழ்ப்பாணம் வந்திருந்த அரச அதிபரும் நேற்று அவருடன் கொழும்புக்குப் புறப்பட்டார்.

யாழ் மாவட்டத்துக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பாக திரட்டப்பட்ட விவரங்கள் அடங்கிய அறிக்கை ஜனாதிபதியின் தூதரிடம் நேற்றுக் காலை கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையை பிரிகேடியர் கொழும்பு திரும்பியதும் அரசிடம் கையளிப்பார்.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், மற்றும் வங்கிகள் உட்பட பல தரப்பாரிடம் இருந்தும் பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பொருள்களின் பட்டியலே நேற்று கையளிக்கப்பட்டது.

அரசினால் தடைநீக்கப்பட்ட பொருள்களில் ஒரு மாதத்துக்குத் தேவையான பொருள்களின் விவரங்கள் அந்தப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன அவற்றின் விவரம் வருமாறு:-

★ மண்எண்ணெய்— 7ஆயிரத்து 200 பரல்.

★ டீசல் — 3 ஆயிரம் பரல்.

★ பெற்றோல் — ஆயிரத்து 200 பரல்.

★ என்ஜின் ஒயில் — 50 பரல்.

★ யூரியா உரம் — 3 ஆயிரம் மெற்றிக் தொன்.

★ ரீ. டி. எம். உரம் —ஆயிரத்து 500 மெற்றிக் தொன்.

இவை தவிர மேலும் சில பொருள்களின் அளவு விவரங்களும் அதில் அடங்கியுள்ளன.

பட்டியலில் இடம்பெற்றுள்ள பொருள்களில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் சிலவற்றின் விவரங்களும் உள்ளன. அவை வருமாறு:

★ அரிசி — 700 மெற்றிக் தொன்.

★ மா — 2 ஆயிரத்து 600 மெற்றிக் தொன்.

★ சீனி — ஆயிரத்து 600 மெற்றிக் தொன்.

★ பருப்பு — 400 மெற்றிக் தொன்.

★ பால்மா — 5 லட்சம் பக்கட்டுகள்.

★ ஏனையவை — 150 மெற்றிக் தொன்.

யாழ். கல்வித் திணைக்களம், யாழ். ஆஸ்பத்திரி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவை தமது மாதாந்த தேவைகள் தொடர்பாக தயாரித்த அறிக்கைகளும் பட்டியலுடன் தனித்தனியே இணைக்கப்பட்டு வழங்கப்பட்டதாகத் தெரியவந்தது.

(உ-3-5-15-89)

"வொய்ஸ் ஒவ் அமெரிக்கா"

## ஒலிபரப்பு நிலைய நிர்மாண வேலை விரைவில் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 28

"வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" ஒலிபரப்பு நிலைய நிர்மாண வேலைகள் இன்னும் இரண்டு, மூன்று வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

நிர்மாண வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் 95ஆம் ஆண்டு ஒலிபரப்புச் சேவையை நடத்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

சிலாபத்தில் 413 ஏக்கர் நிலத்தில் இந்த ஒலிபரப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட உள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் 1985ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தாலும், வொய்ஸ் ஒவ் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையத்தாலும் கைச்சாத்திடப்பட்டது. (இ-15)

## ஷெல்லை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் வெடித்த சமயம் இவருக்கு அருகில் நின்ற மாரிமுத்து உதயகுமார் (வயது 26) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை படுகாயமுற்றார்.

மரணமடைந்தவரின் சகோதரியான சிவபாதசுந்தரம் நந்தினி (வயது 13), சிறிய தாயாரான விஜயகுமார் ராஜேஸ் (வயது 30) மற்றும் பவளராசா ரேணுகா (வயது 3) ஆகியோர் காயமடைந்தனர்.

இம்மூவரும் ஷெல் வெடித்த இடத்துக்கு அருகில் உள்ள வீட்டின் முற்றத்தில் ஒன்றாக இருந்த சமயம் இச்சம்பவம் நிகழ்ந்தது.

உயிரிழந்தவரும், காயமடைந்தவர்களும் சில்லாலையிலிருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டையில் தங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமுற்றோர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-15)

## அதிகாரிகள் திரும்பினர்

கொழும்பில் இருந்து வந்து யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலையில் ஒரு வாரமாக தங்கியிருந்த யாழ். செயலக அதிகாரிகள் பலர் "நரோமா" கப்பல் மூலம் நேற்று இங்கு வந்து சேர்ந்தனர்.

## ராணுவச்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் ஒரு விருந்துபசாரத்தில் ரஞ்சன் விஜேரத்தினாவுக்கும் நஞ்சூட்ட முயற்சித்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அவர் மீது இராணுவ நீதிமன்றத்தால் விசாரணை நடத்தப்பட்டது. குற்றவாளியாகக் காணப்பட்ட அச்சிப்பாய்க்கு 15 ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

(ஓ-எ)


அராலி ஐக்கிய விளையாட்டுக் கழக வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு இல: 075
2ஆம் பரிசு இல: 171
3ஆம் பரிசு இல: 18

மற்றும் மூன்று ஆறுதல் பரிசுகளின் இலக்கங்கள்.

679 626 151

செயலாளர்,
(26266) அராலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்.


# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து தம்பிராசா

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த முன்னாள் ஏழாலை கிராமசபையின் புன்னாலைக்கட்டுவன் 18 ஆம் வட்டார உறுப்பினர் நாகமுத்து தம்பிராசா 27-6-1993 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-6-93 அன்று புன்னாலைக்கட்டுவனில் நடைபெற்றன.

தகவல்:-
விக்கினேஸ்வரன் (மகன்)
(ஆசிரியர், அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை)

(26269)

## சின்னத்துரை சௌபாக்கியம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சௌபாக்கியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லீலா ஸ்ரோஸ், லீலா அச்சக உரிமையாளர் ச. த. சின்னத்துரை அவர்களின் மனைவியும், க. திசைவீரசிங்கம், திருமதி நாகலிங்கம் முத்தம்மா, ஆகியோரின் சகோதரரும், சுந்தரலிங்கம் (சட்டத்தரணி), காலஞ்சென்ற பாலேந்திரா (சட்டத்தரணி) டாக்டர், சோமசேகரம் (லண்டன்), அருளானந்தம் (றம்சான் காட்வெயர்ஸ்ரோஸ்), தேசபந்து (லீலா என்ஜினியரிங்), லோகநாதன் (லீலா அச்சகம்), தனபாலா (டினோசன் ரேடிங்கோ), சொக்கநாதன் (பொறியியலாளர்-அமெரிக்கா), றவீந்திரன் (ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்) ஆகியோரின் தாயும் ஆவார்.

28. 6. 93 திங்கட்கிழமை மாலை 4 மணி அளவில் கொழும்பில் இறுதிக்கிரியைகள் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
க. திசைவீரசிங்கம்.

வளர்பிறை,
தெல்லிப்பழை கிழக்கு.
தெல்லிப்பழை.

(26270)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28-06-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.